**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

**மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்**

**சட்டக்கற்கைகள் திணைக்களம்**

**சட்டமாணி பட்டப்படிப்பு - மட்டம் 6**

**இறுதிப்பரீட்சை – 2020/2021**

**திறந்த புத்தகப் பரீட்சை**

**வணிகச்சட்டம் - LLU 6716**

**காலம் : 03 மணித்தியாலங்கள**

---

திகதி : 10 செப்டெம்பர் 2021 நேரம்: **மு.ப 9.30 – பி.ப 12.30**

---

**மொத்த வினாக்களின் எண்ணிக்கை - 05**

**நான்கு (04) வினாக்களிற்கு மாத்திரம் விடையளிக்கவும்**

**தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்**

1. நிசல் என்பவன் 2021ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10ம் திகதியிடப்பட்ட வாடகை கொள்வனவு உடன்படிக்கையின் படி (hire-purchase agreement) இலங்கையின் முன்னணி நிதி நிறுவனமொன்றான கல்சன் கம்பனியிடமிருந்து மோட்டார் காரொன்றினை வாடகைக்குப் பெற்றான். நிசல் ரூபா.800,000/= த்தினை ஆரம்ப வைப்பாகவும் மிகுதி ரூபா.3,600,000/= இனை வட்டியுடன் சேர்த்து '60 மாதத் தவணைகளில்' செலுத்துவதற்கும் இணங்கினான். இரண்டு தவணைகள் தொர்ச்சியாகச் செலுத்திய பின்னர் குறித்த கார் குறைபாடுள்ள நிலையில் காணப்படுவதனைக் கண்டறிந்த நிசல் மேலும் பணம் செலுத்துவதனை நிறுத்தியதுடன் 30 யூன் 2021 எனத் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் வாகனத்தினை நிராகரிக்கும் தனது எண்ணத்தினை அவன் தெரிவித்தான்.

   குறித்த வாகனமானது கல்சன் கம்பனியால் இருவார காலத்திற்குள் கையகப்படுத்தப்பட்டதுடன் மோட்டார்காரில் பின்வரும் குறைபாடுகள் உள்ளதனைக் குறித்த கம்பனியானது கண்டறிந்தது

   அ) ஒப்பந்தம் செய்யப்பட்ட பின்னர் பயணத் தொலைவு அலைவியின் (odometer) மைல்தூரம் (millage) மீட்டமைக்கப்பட்டமை;

   ஆ) வழிச்செலுத்தல் வட்டு (navigation disk) காணாமல் போயுள்ளமை;

   இ) வாகனத்தினைச் செலுத்தும் போது வித்தியாசமான ஒலியொன்று கேட்கின்றமை;

ஈ) கண்ணாடியில் கீறல்கள் ; மற்றும்

உ) பிரேக் அமைப்புத் தோல்வி

குறித்த காரினை வாடகைக்கு எடுப்பதற்கு முன்னராகவே நிசல் ஒரு பரீட்சார்த்த செலுத்துகையினை மேற்க்கொண்டதனால் காரின் எந்தவொரு குறைபாட்டிற்கும் கம்பனியானது பொறுப்புடையதாகாதென்பதுடன் மேலே அடையாளம் காணப்பட்ட அனைத்துக் குறைபாடுகளிற்கும் நிசல் மட்டுமே பொறுப்பு என்று கல்சன் கம்பனியானது கருதுகின்றது. மேலும் கல்சன் கம்பனியானது பழுதுபார்க்கும் செலவினை நிசலிடமிருந்து கோருகின்றது.

குறித்த வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையை தான் வலிதானமுறையில் முடிவுறுத்தியதாகவும் கல்சன் கம்பனியானிக்கு தான் ஏற்கனவே செலுத்திய ஆரம்பத் தொகை மற்றும் இரு தவணைப்பணம் என்பவற்றை மீளப்பெறமுடியுமெனவும் நிசல் நம்புகின்றான்.

1982ம் ஆண்டின் நுகர்வோர் கடன் சட்டத்தின் பொருத்தமான ஏற்பாடுகள் மற்றும் பொருத்தமான வழக்குச் சட்டங்கள் என்பவற்றில் கவனம் செலுத்திக் கட்சிக்காரர்களுக்கு அறிவுரை வழங்குக.

(25 புள்ளிகள்)

2. கோவிட் 19 இன் பேரழிவு ஏற்படுத்தும் சுகாதாரப் பாதிப்புக்களுக்கு மத்தியில், கியூரோ எனும் காப்புறுதிக் கம்பனியிடமிருந்து பெரும்பாலான மருத்துவம், அறுவைச்சிகிச்சை மற்றும் மருத்துவமனை செலவுகளை உள்ளடக்கிய ரூபா.500,000/= பெறுமதியான சுகாதாரக் காப்பீட்டுக் கொள்கையைப் பெறுவதற்கு சுப்பிரமணியம் விரும்பினான். கியூரோ கம்பனியின் முகவரொருவனான அயந்த என்பவனால் குறித்த கம்பனியானது சுப்பிரமணியத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

கம்பனியால் ஆங்கிலத்தில் வரையப்பட்டு அச்சிடப்பட்ட முன்மொழிவுப் பத்திரமானது காப்பீட்டுக்கான விண்ணப்பதாரியினால் ‘‘முழுமையாகவும் தெளிவாகவும் தனது சொந்தக் கையெழுத்தில்’’ பதிலளிக்க வேண்டிய பல வினாக்களை உள்ளடக்கியிருந்தது. கம்பனியால் பரிந்துரைக்கப்பட்ட மருத்துவ நடுவரினால் அவனிற்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைக்கு முன்னராக விடையளிக்கப்பட வேண்டிய ‘‘தனிப்பட்ட கூற்றில்’’ உள்ள வினாக்கள் தொடர்பாகவும் இதனை ஒத்த தேவைப்பாடொன்று காணப்படுகிறது. சுப்பிரமணியத்தினால் ஆங்கிலத்தில் தனது பெயரினைக் கையொப்பமிட முடிந்ததெனினும் மற்றபடி அவர் அம்மொழியில் தேர்ச்சியற்றவர் ஆவார். முன்மொழிவுப் பத்திரத்தின் வாசகங்களானவை அயந்தவினால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு சுப்பிரமணியத்திற்கு

விளங்கப்படுத்தப்பட்டதுடன் அயந்தவினால் நிரப்பவும் பட்டது. ''முன்மொழிவுப்பத்திரத்திலுள்ள அனைத்துக் கூற்றுக்களும் குறித்த ஒப்பந்தத்தின் அடிப்படையாகும்'' எனக்குறிப்பிடப்பட்டிருந்த அச்சிடப்பட்ட முன்மொழிவுப் படிவத்தின் அடிப்பகுதியில் ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய இருமொழிகளிலும் சுப்பிரமணியம் கையொப்பமிட்டார். குறித்த தனிப்பட்ட கூற்றும் ஆங்கிலத்தில் அச்சிடப்பட்டிருந்ததுடன் மருத்துவப் பரிசோதனைக்குப் பின்னராக மருத்துவ நடுவரின் முன்னிலையில் இரு மொழிகளிலும் கையொப்பமிடப்பட்டது.

சுப்பிரமணியத்தின் உடல்நிலையானது பொதுவாக அதே வயதினைச் சேர்ந்த உடல்நலம் மிக்க நபர்களை ஒத்தது எனக் குறித்த தனிப்பட்ட கூற்றானது குறிப்பிடுகிறது. கம்பனியானது அவனது முன்மொழிவினை ஏற்றுக் கொண்டது.

கீழே தரப்பட்டது குறித்த முன்மொழிவின் ஒரு பகுதியாகும்.

'' 1. குடற்காய்சல் (typhoid), சளிக்காச்சல் (influenza), யானைக்கால் நோய் அல்லது வேறு ஏதாவது காய்சல் போன்ற ஏதாவது நோய்களால் நீங்கள் எப்போதாவது பாதிக்கப்பட்டிருக்கிறீர்களா?

2. மேற்குறிப்பிட்ட நோய்களுக்காக ஏதாவது மருத்துவரிடம் கடந்த ஐந்து வருடங்களுக்குள் ஆலோசனை பெற்றீர்களா, அது உங்களை வீட்டுக்குள் முடக்கி வைத்திருந்தமை அவசியமல்ல? அவ்வாறாயின் ஆலோசனை பெற்ற மருத்துவரின் பெயர், முகவரி மற்றும் விபரங்களை வழங்குக''

குறித்த முன்மொழிவில் உள்ள மேற்கூறிய இரு வினாக்களுக்கும் 'இல்லை' எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதும் சுப்பிரமணியம் கடந்த வருடம் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டிருந்தார். குறித்த சுகாதாரக் காப்பீடுக் கொள்கை கிடைக்கப்பெற்ற இருமாதங்களின் பின்னர் சுப்பிரமணியம் கோவிட் 19 நோயால் பாதிக்கப்பட்டு 14 நாட்கள் தனியார் மருத்துவமனையில் தங்கினார். மருத்துவமனைச் செலவுகள் குறித்த காப்புறுதிக் கொள்கையின் கீழ் கோரப்பட்டபோது சுப்பிரமணியம் காப்புறுதி ஒப்பந்தத்தினை மீறியதாகக் காரணம் காட்டி கியூரோ கம்பனியானது குறித்த கோரிக்கையைச் செலுத்த மறுத்தது.

சுப்பிரமணியத்திற்கு அவரது சட்டநிலைமை மற்றும் பரிகாரங்கள் ஏதாவது இருப்பின், என்ன பரிகாரங்கள் அவருக்கு கிடைக்கப்பெறும் எனவும் ஆலோசனை வழங்குக. உங்களது விடையை பொருத்தமான வழக்குச் சட்டம் மூலம் உறுதிப்படுத்தவும்.

(25 புள்ளிகள்)

3. ''தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் கோவிட் 19 பெருந்தொற்றானது தேசிய ஒழுங்கு விதிகள் மற்றும் சர்வதேச பரிந்துரைகளுக்கு அமைவாக வழக்கமான செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளை தொடர்ந்து நடத்துவதற்கு தேசிய உணவுப்பாதுகாப்புக் கட்டுப்பாட்டு அமைப்புக்களுக்கான பொறுப்புக்களைக் கொண்ட தகுதிவாய்ந்த அதிகாரங்களுக்கு அசாதாரணமானதும் புதுமையானதுமானதொரு சவாலினை ஏற்படுத்துகின்றது''

*Food and Agriculture Organization of United Nations (2020)*

மேற்குறிப்பிட்ட கூற்றின் அடிப்படையில் கோவிட் 19 பெருந்தொற்றால் ஏற்படுத்தப்பட்ட புதிய இயல்பான சூழ்நிலையால் உருவாக்கப்பட்ட சவால்களை சமாளிக்க திருத்தப்பட்டவாறான 1980ம் ஆண்டின் 26ம் இலக்க உணவுச்சட்டம் மற்றும் 2003ம் ஆண்டின் நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகள் போதுமானவையா அல்லது இல்லையா என ஆராய்க.

(25 புள்ளிகள்)

4. பின்வரும் சூழ்நிலைகளிலிருந்து எழும் சட்டவிளைவுகளை ஆராய்க.

அ) மஹிந்தவினால் கையொப்பமிடப்பட்டு குறுக்கிடப்பட்ட வெற்றுக் காசோலையொன்று நாமலின் அலுவலக ரூபா.100,000/= பெறுமதியான மின்சார கட்டணத்தினைச் செலுத்துவதற்குப் பயன்படுத்துவதற்காக அவனுக்கு வழங்கப்பட்டது. நாமல் அவனது வீட்டினை திருத்துவதற்காக ரூபா.1,000,000/= செலுத்துவதற்கு அதனைப் பயன்படுத்தினான்.

(8 புள்ளிகள்)

ஆ) யோகன் சார்பாக கசுனால் வரையப்பட்ட ரூபா. 25,000/= பெறுமதியுள்ள உண்டியலானது யோகனால் அது வெற்றாகக் கையொப்பமிடப்பட்ட பின்னர் தொலைந்தது. அதனைக் கண்டெடுத்த கலும் பணத்தினைப் பெற்றுக் கொள்வதற்காக அதனைக் கசுனிடம் சமர்பித்தான்.

(8 புள்ளிகள்)

இ) சஜித் கடனொன்றைச் செலுத்துவதற்காக காசோலையொன்றை அருண சார்பில் மெரிட் வங்கி மீது வரைந்தான். அருண குறித்த காசோலையை குறுக்குக் கோடிட்டு, புறக்கோடிட்டு ரசிக்கவிடமிருந்து பெற்ற எழுது கருவிகளுக்காக அவனுக்குக் கைமாற்றினான். ரசிக்க குறித்த காகோலையை வின்டி வங்கியிலுள்ள தனது கணக்கில் வைப்புச்செய்ததுடன் வின்டி வங்கியானது பெற்றுக்கொண்ட பணத்தினைத் தவறுதலாக இன்னொருவருடைய கணக்கில் வைப்புச்செய்தது.

(9 புள்ளிகள்)

5. ‘‘கொள்வனவாளன் விலையைச் செலுத்தும் தனது முக்கிய கடமையில் இருந்து தவறினால், விற்பனையாளருக்கு, நிச்சயமாக குறித்த ஒப்பந்தத்திலேயே தனிப்பட்ட நடவடிக்கை உள்ளது, ஆனால் விற்பனையாளர் குறித்த நிவாரணத்தினை மீள வேண்டி எப்போதும் நிர்ப்பந்திக்கப்பட்டால் அவருடைய நிலைமையானது பல விடயங்களில் திருப்தியற்றதாக இருக்கும்.’’

**-*Atiyah's Sales of Goods,* John N Adams and Hector Macqueen (Twelfth Edition)2010**

இலங்கையின் பொருட்கள் விற்பனைகள் தொடர்பான சட்டத்தின் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட கூற்றின் வலிதார்ந்த தன்மையை விமர்சன ரீதியாகப் பகுப்பாய்வு செய்யவும். உமது விடையினை வழக்குத் தீர்ப்புக்களால் ஆதாரப்படுத்தவும்.

(25 புள்ளிகள்)

****பதிப்புரிமை பெற்றது****